**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி மாதம் 32-ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ம் நாள் வியாழக்கிழமை

**இடை மனு எண்.02/2026 ல்** அசல் வழக்கு எண்.138/2022

1. நிர்மலா
2. சங்கர் ......மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

/எதிர்/

ரேவதி .....எதிர்மனுதாரர்/வாதி

********

இம்மனு 02.07.2026 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.S.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு. P.ஸ்ரீதரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பகரும்........

**/ உத்தரவு /**

அசல் வழக்கில் வா.சா.2 ஐ மீண்டும் அழைத்து (ரீக்கால் செய்து) உத்தரவிட வேண்டும் என்று மனுதாரரால் உரிமையியல் நடைமுறை சட்ட ஆணை 18, விதி 17 ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

I. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் இந்த மனுவின் 2ம் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 2ம்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.16 18:07:29 +0530

பிரதிவாதி என்றும், 1ம் மனுதாரர் மனுதாரரின் மனைவி என்றும், அசல் வழக்கானது நஷ்ட ஈடு கோரி கோரி மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர்/ வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் வாதி தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர் முதல் விசாரணையும், குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளார் என்றும், 27.02.2026 அன்று 1ம் மனுதாரர் வேறு நீதிமன்றத்தில் ஆஜரானதால் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் முடிக்கப்பட்டுவிட்டது என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், எனவே, வா.சா.2 குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாக மீண்டும் ரீ ஓபன் செய்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## II. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தகுந்ததல்ல என்றும், வா.சா.2 ஐ 19.09.2025 அன்று முதல் விசாரணை செய்து அதன்பிறகு 16.10.2025, 03.11.2025, 20.11.2025, 02.12.2025, 19.12.2025, 12.02.2026, 27.02.2026 என 8 வாய்தாக்கள் கடந் 6 மாதங்களாக வழங்கப்பட்டு இறுதியாக 27.02.2026 அன்ற வா.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் வேண்டுமென்றே குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்றும், வழக்கினை முடிவடையாமல் தடுக்கவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் 05.07.2023 ல் ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிட்டு, மேற்படி ரத்து செய்ய இடைமனு எண்.01/2023 தாக்கல் செய்துள்ளனர் என்றும், 27.02.2026 அன்று மனுதாரர்களின் வழக்கறிஞர்

ஆஜராகியிருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் SLP 12012-12013/2025 Shukaran sinbng – Vs – Abhayaraj singh & ors என்ற வழக்கில் CPC Order 18 R17 ன் பயன்பாடு குறித்து வழிகாட்டுதல் கோரப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டு எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## III. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிக்க வேண்டியதா? இல்லையா என்பதேயாகும்.

IV. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

## IV. பிரச்சனைக்கான தீர்வு

1) 27.02.2026 அன்று 1ம் மனுதாரர் வேறு நீதிமன்றத்தில் ஆஜரானாதால் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் முடிக்கப்பட்டுவிட்டது என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், எனவே, வா.சா.2 குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாக மீண்டும் ரீ ஓபன் செய்து உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதுரை செய்தார்.

2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.2 ஐ 19.09.2025 அன்று முதல் விசாரணை செய்து அதன்பிறகு 16.10.2025, 03.11.2025, 20.11.2025, 02.12.2025,

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.16 18:07:41 +0530

19.12.2025, 12.02.2026, 27.02.2026 என 8 வாய்தாக்கள் கடந் 6 மாதங்களாக வழங்கப்பட்டு இறுதியாக 27.02.2026 அன்ற வா.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கினை காலதாமதப்படுத்தவும், வழக்கு முடிவுக்கு கொண்டுவராமல் தடுக்கும் நோக்கத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே இந்த மனுவை எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கற்றறிந்த எதிர்மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் வாதுரை செய்தார்.

3) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டது. இந்த மனு வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைத்து விசாரணை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 19.09.2025 ல் வா.சா.2 முதன்மை சாட்சியமளித்துள்ளார். வா.சா.2 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக 16.10.2025, 03.11.2025, 20.11.2025, 02.12.2025, 19.12.2025, 12.02.2026, 27.02.2026 வாய்தாக்கள் ஒத்தி வைக்கப்பட்டு, பின்னர் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, அதன்பிறகு வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 19.09.2025 முதல் 27.02.2026 வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்ய ஆஜராகாமல் இருந்ததற்கு மனுதாரர்கள் தரப்பில் கூறப்படும் காரணம் ஏற்கத்தக்கதாக இல்லை. மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேறு நீதிமன்றம் ஆஜரானார் என்பதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அதிக அளவு கால அவகாசங்கள் கொடுத்தும்,

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.16 18:07:47 +0530

பயன்படுத்திக்கொள்ளாமல் இந்த வழக்கை இழுத்தடிப்பதற்காகவே மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது தெளிவாக தெரிகிறது. எனவே மனுதாரரின் மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**V. முடிவாக,**

**மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சுருக்கு மொழியப்பட்டு அவரால் எழுதிப் பெயர்த்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.16 18:07:52 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**பின் இணைப்புகள்**

1. மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் : இல்லை
2. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் : இல்லை
3. மனுதாரர்கள் தரப்பு சாட்சி : இல்லை
4. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி : இல்லை

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.16 18:07:57 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**Draft order / Fair order**

**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

**I.A.No.02/2026** in

O.S.No.138/2022, நாள் : 16.07.2026